**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.4903/ஆ5/2024, நாள்.26/12/2024**

•••••

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வி – ஜல் சக்தி அபியான் "மழைநீர் சேகரிப்பு இயக்கம் – 2024" – கருப்பொருள் "மழைநீர் சேகரிப்பில் பெண்களின் பங்கு" – 09.03.2024 முதல் 30.11.2024 வரை செயல்படுத்தப்படும் மழைநீர் சேகரிப்பு இயக்கத்தின் சார்பாக 2024–ஆம் ஆண்டிற்கான தேசிய நீர் விருதுகள் (National Water Awards) வழங்கப்படவிருப்பது – தொடர்பாக |
| பார்வை | வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித ந.க.எண்.2410/2024/அ4, நாள். 27.11.2024 |

•••••

பார்வையில் காணும் வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதத்திற்கிணங்க ஜல் சக்தி அபியான் : மழைநீர் சேகரிப்பு இயக்கத்தின் ஐந்தாவது பதிப்பாக "மழைநீர் சேகரிப்பில் பெண்களின் பங்கு" என்பதை கருப்பொருளாக கொண்டு 09.03.2024 முதல் 30.11.2024 வரை 11 செயல்பாடுகள் தொடர்புடைய துறைகள் மூலம் வேலூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2018–ஆம் ஆண்டு முதல் ஜல் சக்தி அமைச்சகத்தின் நீர் ஆதாரம், நதி மேம்பாடு மற்றும் கங்கை புணரமைப்புத் துறையால் தேசிய நீர் விருதுகள் வழங்கப்பட்டு வருவதாகவும், நீர் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை பணிகளில் செயல்படும் பங்குதாரர்களான கிராம ஊராட்சிகள் , நகர்புற உள்ளாட்சிகள், குடிம சங்க அமைப்புகள், நீர் பயன்பாட்டு அமைப்புகள், பள்ளிகள், கல்லூரிகள் போன்ற அமைப்புகளை ஊக்கப்படுத்தும் நோக்கில் அக்டோபர் 23, 2024 அன்று 2024–ஆம் ஆண்டிற்கான 6–வது தேசிய நீர் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளதெனவும், கீழ்காணும் 9 வகைப்பாடுகளில் விருதுகள் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இது குறித்த தகவல்களை அறிய Rashtriya Puraskar Portal (www.awards.gov.in) அல்லது (www.jalshakti–dowr.gov.in) என்ற இணையதளத்தை பார்வையிட தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. Best State 2. Best District 3. Best School / College 4. Best Institution (other than School or College) 5. Best Urban Local Body 5. Best Village Panchayat 7. Best Water User Association 5. Best Industry and 9. Best Civil Society

6–வது தேசிய நீர் விருதுகள் தொடர்பாக 31.12.2024–க்குள் மேற்கண்ட இணையதளத்தில் விண்ணப்பிக்குமாறு அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – பார்வையின் கடித நகல்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் :
அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல் :
1. வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்,
   (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்)
   வேலூர் மாவட்டம். (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)